பாரதிதாசன் பாட்டு

(தங்கம்மாள் பாரதி நூலிலிருந்து)

(நொண்டிச்சிந்து மெட்டு)

கெஞ்சுவதன் பயனோடி — அம்மா
கேடுவந்து சேருவதுன் தயவோடி — எனை
மிஞ்சவிட மனமில்லையோ — நாங்கள்
மேனிலையில் இருந்ததை அறியாயோ — இந்த
மஞ்சினுயர் வானமறிய — இந்த
மண்அறிய தேவியுந்தன் மனமறிய — நாங்கள்
பஞ்சையெனப் பறந்ததுண்டோ — இந்த
பாரினுள்ள தேசங்கள் இகழ்ந்ததுண்டோ (உன்னைக் கெஞ்சுவதன்)

ராமனென ஓரரசன் — அவன்
ராச்சியத்திலே வறுமைப் பேச்சுக்கள் உண்டோ — இந்த
பூமிமுழு தாண்டிருந்தவன் — ஒரு
பூததயையே யுடைய மாயவனுந்தான் — அன்று
சாமியென்றும் அடிமையென்றும் — ஒரு
சாதனமென்றால் பல விவாதமிடுவார் — என்று
நாமறியக் கேட்டதுமுண்டோ — நித்தம்
நாளுக்கொரு துன்பமென வளர்வதெல்லாம் (உன்னைக் கெஞ்சுவதன்)

முப்பத்துமுக் கோடிஜனங்கள் — நாங்கள்
மோச மறியாதிருந்தோம் முனிவர் மக்கள் — இதை
செப்பிடினும் பிறர்அறியார் — இந்த
சகமுழுதிலும் கொண்ட பகைமையிலே — நமர்
ஒப்பி யந்த துரைத்தனத்தார் — ஜயம்
ஓங்கிநிற்கவே படை தாங்கியிருந்தோம் — நாம்
கப்பல்மிசைக் கடல்கடந்தோம் — முன்னர்
கண்டறிந்திடாத பல தேசமடைந்தோம் (உன்னைக் கெஞ்சுவதன்)

சீறிவரும் குண்டினிடையே — அங்கு
சிங்கமெனப் பாய்ந்துவரும் பகைவர்முன்னே — நமை
நீறுசெய்யும் விஷப்பந்துகள் — நாம்

நிற்கையில் உறங்குகையில் இடிபோல
வீறுகொள வெடித்திடுமே — நமை
வெற்றிபெறச் சேகரித்த மாயப்புகையில் — நமை
மீறிவரும் மயக்கத்திலே — சிலர்
மீண்டுவரப் பலபேர் ஆவிதுறந்தார் (உன்னைக் கெஞ்சுவதன்)

ஆள்கொடுத்த பெருநாடு — பின்னும்
அளவின்றிப் பொருட்குவை கொடுத்திருக்க — இங்கு
கோல்நடத்தும் துரைமார்கள் — நமைக்
கொடியதோர் சட்டமிட்டுக் கடுமைசெய்தால் — அந்த
நாள் கொடுத்த வாக்குறுதியை — நிலை
நாட்டுவது துரைமன்னர் கடமையன்றோ — இது
நீள்புவிக்குள் அதிசயமே — இங்கு
நியாயமென்ப தனைவர்க்கும் பொதுவில்லையோ (உன்னைக் கெஞ்சுவதன்)